From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C. /No. 04 /2014

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Dhanushkodi | Father/Husband Name | : Vellapanayan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 09.12.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் கொடுக்கம்பட்டியில் குடியிருந்துகொண்டு, விவசாயவேலை பார்க்கிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 13 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் சபாபதியின் தாயார் உடலநிலை சரியில்லை என்று சொல்லி அவர் என்னிடம் நெருக்கமாக இருந்ததால் என்னிடம் பணம் கேட்டார், என்னால் பணம் கொடுக்க இயலவில்லை. அப்போது அவர் என்னிடம் நகை ஏதாவது இருந்தால் கொடுங்கள் மிகவும் ஆபத்தாக இருக்கிறது என்று கேட்டார். நானும் 14 பவுன் நகையை கொடுத்தேன். அவர் எனக்கு அந்த நகையை மீட்டு தருவதாக சொல்லி வங்கிக்கொண்டு மீட்டுத்தராமல் காலம் கழித்து வந்தார். நான் கொடுத்த 14 பவுன் நகை, எனது மகள் ஜெயமணியின் நகையாகும். அந்த நகையானது எனது மருமகன் வெளிநாட்டிலிருந்து எனக்கு அனுப்பி வைத்த நகையாகும். அதைத்தான் நான் அவரிடம் கொடுத்தேன். நான் கொடுத்த நகையை சபாபதி வெங்கடேஸ்வரியிடம் கொடுத்ததாகவும், வெங்கடேஸ்வரி மேலூரில் உள்ள முத்தூட் பைனான்சில் அடகு வைத்தார்கள்.

அப்போது நான் வெங்கடேஸ்வரியிடம் சென்று கேட்டபோது தன்னிடம் 10.1/4 பவுன் நகையை சபாபதி கொடுத்ததாகவும், அதை அவர் மேலூர் முத்தூட் பைனான்சில் அடகு வைத்ததாகவும் சொன்னார். எப்பொது திருப்பி தருவதாக அவரிடம் நான் கேட்டபோது ஒரு வாரத்தில் திருப்பி தருவதாக வெங்கடேஸ்வரி என்னிடம் சொன்னார். ஆனால் அவர் சொன்னதுபோல் எனக்கு நகையை திருப்பி தரவில்லை. நான் முத்தூட் பைனான்சிற்கு சென்று இது சம்மந்தமாக விசாரித்தேன். அப்போது

வெங்கடேஸ்வரி நகையை திருப்பி சென்றுவிட்டதாக சொன்னார்கள். நான் மறுபடியும் வெங்கடேஸ்வரியிடம் சென்று கேட்டபோது நான் நகையை இன்னும் திருப்பவில்லை, திருப்பி தருவதாக சொன்னார். நான் அவரிடம் என்னம்மா இப்படி சொல்லிவிட்டு திருப்பித்தருகிறேன் என்று அனியாயமாக சொல்கிறீர் என்று கேட்டேன். அதற்கு அவர் நான் தகருகிறேன் போயா என்று சொல்லிவிட்டார். அதன்பின்பு நான் கீழவளவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

அங்கு போலீசார் வழக்கு பதிவு செய்யாமல் காலம் கடத்தியதால் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். அப்போது என்னையும், சபாபதி வரவழைத்து சபாபதியிடம் கேட்டபோது அவர் நகை பெற்றுக்கொண்டதை ஒப்புக்கொண்டு 4 பவுனை சபாபதியிடமிருந்து போலீசார் வாங்கி என்னிடம் கொடுத்தார். மீதியுள்ள 10.1/4 பவுன் நகையை எப்போது தருகிறீர்கள் என்று கேட்டதற்கு சபாபதி தும்பைப்பட்டி வெங்கடேஸ்வரியிடம் இருப்பதாகவும், அதை வாங்கி தருவதாக சொன்னார். அதன்படி நகையை திருப்பி தராததால் எதிரிகள்மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. என்னுடைய நகைகளை நான் கொடுக்கம்பட்டியில் வைத்துதான் சபாபதியிடம் கொடுத்தேன். **(முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**